# ரணிலின் மூளைச்சலவையாலேயே இந்தியா சென்றுள்ளார் அநுரகுமார

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மகிழ்ச்சி

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய மக்கள் சக்தியை மூளைச்சலவை செய்துள்ளார். அதன் காரணமாகவே தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க இந்தியத் தலைவர்களைச் சந்திக்கச் சென்றுள்ளார்.” - என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் இன்று உரையரறும்போது தெரிவித்தார்.

இந்தியாவின் ஆதிக்கம் குறித்து உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் இன்று இந்தியாவுக்கே சென்றுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பழைய ஆடைகளை அணிந்தவர்கள் கோட் அணிகின்றனர். இது குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். இது ரணில் விக்கிரமசிங்க மூளைச்சலவை செய்ததால் ஏற்பட்ட மாற்றம்.

அதானி குழுமத்துடன் இணைந்து செயற்படுவதற்காக தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் எவ்வாறு அரசை விமர்சித்தார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், அவர்களில் மனதில் இன்று மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதை நாங்கள் வரவேற்கின்றோம்.” - என்றார்.



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 25 வியாழக்கிழமை 08.02.2024 கதிர் 177

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



# யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய நடிகைகள் தங்கியுள்ள விடுதிகளை முற்றுகையிடுவோம்!

## அடக்குமுறைகளுக்கு எதிரான அமைப்பு எச்சரிக்கை




யாழ்ப்பாணத்தில் அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்பாட்டில் நாளை இந்திய பிரபல பாடகர் ஹரிஹரன் கலந்துகொள்ளும் இசை நிகழ்ச்சி ஒன்று இடம்பெறவுள்ளது. இந்த இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்ள யாழ்ப்பாணத்துக்கு வருகை வந்துள்ள திரைப்பட நடிகர், நடிகைகளோடு புகைப்படம் எடுப்பதற்கும் சந்திப்பதற்கும் ஒருவருக்கு ரூபா 30 ஆயிரம் அறவிடப்படும் என்று குறித்த தனியார் நிறுவனத்தால் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்றைய தினம் சமகால 2➤

# ம.ம.முவின் தேசிய மாநாட்டை ஏப்ரலில் நடத்துவதற்குத் திட்டம்

மலையக மக்கள் முன்னணியின் தேசிய மாநாடும் 35 ஆண்டு நிறைவு விழாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26, 27 ஆம் திகதிகளில் நுவரெலியாவில் அல்லது ஹட்டனில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பான கட்சியின் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது என்றும், இதன்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மலையக மக்கள் முன்னணி 1989 ஆம் 2➤

# நிறை குறைத்த பாண் விற்பனை! 100 பேக்கரிகள் வசமாக சிக்கின

பாண் தயாரிப்பிற்கு நிர்ணயிக்கப்பட்ட எடை குறித்து வர்த்தமானி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, நுகர்வோர் அதிகாரசபை நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகளை ஆரம்பித்துள்ளதுடன், நிர்ணயிக்கப்பட்ட எடையில்லாத பாண்களை விற்பனை செய்த 100 க்கும் மேற்பட்ட பேக்கரிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பெரும்பாலான ஹோட்டல்களில் பாணின் விலை காட்சிப்படுத்தப்படவில்லை என அதிகாரசபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார். நாட்டிலுள்ள 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் பேக்கரிகளை பரிசோதிக்க நுகர்வோர் விவகார அதிகாரசபையின் விசாரணை அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவார்கள் எனவும் தெரிவித்த அந்த அதிகாரி, பாண் விற்கப்படும் பேக்கரிகளில் கண்டிப்பாக நிறை பார்க்கும் கருவி வைத்திருத்தல் வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார். (ரெப-15)

# 40வீத ‘சிபெட்கோ’ எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மூடப்பட்டன

## விநியோகஸ்தர் சங்கம் தெரிவிப்பு

நாடு முழுவதும் உள்ள பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சுமார் நாற்பது சதவீதமான ‘சிபெட்கோ’ எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நேற்று (07) மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதாக எரிபொருள் விநியோகஸ்தர் சங்கம் தெரிவித்துள்ளது. இது குறித்து சங்கத்தின் ஊடக பேச்சாளர் தெரிவிக்கையில், ‘எரிபொருள் நிலையத்திற்கு வரும் ஓடர்களுக்குரிய பணத்தை கூட்டுத்தாபனத்தின் கணக்கில் காலை 10 மணிக்குள் வரவு வைக்க வேண்டும் என்ற புதிய விதிமுறை கொண்டு வரப்பட்டதே இதற்கு காரணம்’ என குறிப்பிட்டுள்ளார்.

வங்கிகள் திறக்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் பணத்தை கணக்கில் சேர்க்க முடியாததால், எரிபொருள் நிலையங்களுக்கு ஓடர்களுக்குரிய எரிபொருள் கிடைக்கப் பெறவில்லை என்றும் அந்த அதிகாரி கூறினார்.

இதற்கு முன்னர், பிந்திய கட்டணம் செலுத்தும் அடிப்படையில் கூட்டுத்தாபனம் எரிபொருளை வழங்கியதாகவும், அதன் பின்னர் உடனடியாக பணத்தை செலுத்தும் முறையிலேயே எரிபொருளை பெற வேண்டியிருந்ததாகவும், இத்தகைய 2➤

# சஜித் பிரேமதாசவுக்கும் இந்தியா அழைப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு இந்தியாவிலிருந்து உத்தியோகபூர்வ அழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவருக்கு பல தடவைகள் மேற்படி அழைப்பு விடுக்கப்பட்டதாகவும், அதற்கமைய சஜித் பிரேமதாச தனது அத்தியாவசிய வேலைகளை முடித்துக் கொண்டு இந்தியாவுக்குச் செல்லவுள்ளதாக ரஞ்சித் மத்தும பண்டார மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரெப-13)



# பிரேஸில் நாட்டில் டெங்கு தடுப்பூசி கண்டுபிடிப்பு! 80 சதவீத பாதுகாப்பை வழங்குவதாக தெரிவிப்பு

தென் அமெரிக்க நாடான பிரேஸிலில் உள்ள புட்டன்டன்ட் நிறுவனத்தால் உருவாக்கியுள்ள புதிய டெங்கு தடுப்பூசி டெங்கு நோயிலிருந்து 80 சதவீத பாதுகாப்பை வழங்குவதாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக ‘நியூ இங்கிலண்ட் ஜேர்னல் ஒஃப் மெடிஸின்’ சஞ்சிகை தெரிவித்துள்ளது.

பிரேஸில் நாட்டிலுள்ள ‘புட்டன்டன்ட் ’ நிறுவனத்தினூடாக மேற்கொளளப்பட்ட பல வருட ஆராய்ச்சியின் பின்னர் உருவாக்கப்பட்ட இந்த தடுப்பூசி டெங்குவால் பாதிக்கப்படாதவர்களுக்கு 80 சதவீத பாதுகாப்பையும், ஏற்கனவே டெங்குவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 89 சதவீத பாதுகாப்பையும் வழங்குகிறது என கண்டறியப்பட்டுள்ளது.




இந்த புதிய டெங்கு தடுப்பு தடுப்பூசி ‘டெட்ராவலன்ட் புட்டன்ட்’ 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பஸ்களில் சில்மிஷம் செய்யும் பேர்வழிகளை மடக்கிப்பிடிக்க சிவில் உடையில் பொலிஸார்

பொதுப் போக்குவரத்தில் சிறு பிள்ளைகள் மற்றும் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்களை தடுக்கும் வகையில் பொலிஸார் நேற்று (07) முதல் விசேட நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளனர்.

அதற்கமைய, பெண்கள் மற்றும் சிறு பிள்ளைகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் நபர்களை கைது செய்வதற்காக, சனத்திரள் அதிகமான பயண நேரங்களில் பொதுப் போக்குவரத்து சேவைகளில் சாதாரண உடையில் ஆண் பொலிஸார் மற்றும் பெண் பொலிஸார் ஈடுபடுத்தப்படுவர். சிவில் உடையில் பணியாற்றும் மேற்படி பொலிஸாருக்கு உதவியாக சீருடை அணிந்த பொலிஸார் முக்கிய சந்திகளில் நிறுத்தப்பட்டிருப்பர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவைகளில் பல்வேறு வகையான பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக பெண் பயணிகளிடமிருந்து பெறப்படும் புகார்கள் அதிகரித்து வருவதால், இந்த நடவடிக்கை பொலிஸாரால் தொடங்கப்பட்டதாகவும், இந்த நடவடிக்கை நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரெப-16)

# அனுராதபுரம் ஹோட்டலில் தங்கியிருந்த வெளிநாட்டு யுவதியிடம் திருட்டு!

கல்வி நிமித்தமாக தனது நண்பருடன் இலங்கைக்கு வந்து அனுராதபுரம் நகரிலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்த நெதர்லாந்து யுவதி ஒருவரிடம் இலங்கை நாணயத்தில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான 300 யூரோக்கள் மற்றும் 29 யூரோ மதிப்புள்ள ஒரு கத்தி உள்ளிட்டவற்றை திருடிச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய நபரை கைது செய்ய அனுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த 23 வயதான நெதர்லாந்து யுவதி தனது நண்பருடன் அநுராதபுரத்திற்கு வருகை தந்து அங்குள்ள ஹோட்டலொன்றில் தங்கியிருந்த போது, இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அறையின் ஜன்னலை திறந்தவாறு மின்விசிறியையும் இயங்கச் செய்து உறங்கிய வேளையில் அதிகாலை 4.30 மணியளவில் அறையில் ஏதோவொரு சத்தம் கேட்டதாகவும், எழுந்து பார்த்தபோது, தனது நண்பரின் பைக்கு அருகில் மண்டியிட்டிருந்த ஒரு நபர் ஜன்னல் வழியாக குதித்து ஓடியதாகவும் மேற்படி யுவதி தாக்கல் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அறையின் ஜன்னலை மூடி சோதனை செய்ததில், 90,000 ரூபாய் பணமும், 300 யூரோ வெளிநாட்டு பணம், 9483 ரூபாய் மதிப்புள்ள கத்தி, ஒரு சோடி ஆடம்பர காதணிகள், இயர்ஃபோன்கள், யூஎஸ்பி கேபிள் உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுள்ளமை தெரியவந்ததாக முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திருட்டில் ஈடுபட்ட நபரை கைது செய்வதற்காக அனுராதபுரம் தலைமையக பொலிஸ் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரெப-18)

## பிரேஸில் நாட்டில் டெங்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பூசி என பெயரிடப்பட்டுள்ளது. பிரேஸிலின் ஐந்து வலயங்களை உள்ளடக்கிய 16 சுகாதார மையங்களில் இந்த தடுப்பூசி பரீட்சிப்பு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரேஸில் நாட்டில் தற்போது கடுமையாக டெங்கு நோய் பரவி வருகிறது. நாட்டின் சனத் தொகையில் ஒரு லட்சம் பேரில் 107.1 பேர் டெங்குவால் பாதிக்கப்படுவதாக தெரியவந்துள்ளது. அந்நாட்டில் டெங்குவால் பாதிக்கப்பட்டவர்களின் இறப்பு விகிதம் 0.9 சதவீதம் எனவும் தெரியவந்துள்ளது.

இந்த வெற்றிகரமான டெங்கு தடுப்பூசி பரிசோதனையையடுத்து அடுத்த ஆண்டு தேசிய அளவில் புதிய டெங்கு தடுப்பூசியை அறிமுகப்படுத்த பிரேஸில் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ரெப-14)

## 40வீத 'சிபெட்கோ' எரிபொருள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் தற்போது மற்றொரு புதிய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதால், சிபெட்கோ எரிபொருள் நிலையங்கள் ஓடர்களை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்தியன் ஒயில் கம்பனி (ஐஓசி) இருநூற்று எண்பது எரிபொருள் நிலையங்களையும், சைனா சினோபெக் நூற்றி ஐம்பது எரிபொருள் நிலையங்களையும் கொண்டுள்ளன. அவை பிந்திய கட்டணம் செலுத்தும் அடிப்படையில் எரிபொருள் ஓடர்களை பெறுகின்றன. ஆனால், சிபெட்கோ எரிபொருள் நிலையங்களுக்கு மாத்திரம் வேறு வழிமுறைகள் கையாளப்படுகின்றன. சிபெட்கோ நிலையங்களை மூடும் திட்டமே இது!, என்றும் அந்த அதிகாரி குற்றம் சாட்டியுள்ளார். (ரெப-12)

## ம.ம.முவின் தேசிய மாநாட்டை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு முன்னாள் அமைச்சர் மறைந்த தலைவர் பெரியசாமி சந்திரசேகரனால் ஸ்தாபிக்கப்பட்டது.

மலையகத் தேசியம் மற்றும் உரிமை அரசியலுக்காக ஆரம்பிக்கப்பட்ட மலையக மக்கள் முன்னணியை ஆரம்பத்திலேயே ஓரம் கட்டிவிட வேண்டும் எனப் பலரும் செயற்பட்டு வந்த நிலையில் தனது விடாமுயற்சியின் பயனாகவும் அன்று அவருடன் இணைந்திருந்த இளைஞர்களின் துடிப்பான செயற்பாடுகளாலும் மலையகத்தின் ஒரு மாற்றுக் கட்சியாக உருவெடுத்தது.

யாரும் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு வளர்ச்சியடைந்த மலையக மக்கள் முன்னணி இலங்கை அரசியல் வரலாற்றில் 1994 ஆம் ஆண்டு ஓர் அரசைத் தீர்மானிக்கின்ற சக்தியாக அது தன்னை அரசியலில் வளர்த்துக்கொண்டது.

"நான் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்பு அமரர் சந்திரசேகரனின் வழியில் இந்தக் கட்சிக்கு தலைமை தாங்கி பல வெற்றிகளைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. எனவே, மலையக மக்கள் முன்னணிக்கென ஒரு சரித்திரம் இருக்கின்றது. கடந்த பல வருடங்களாக மாநாட்டை நடத்த முடியாத நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள மாநாட்டை மிகவும் சிறப்பாக முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது." - என்று இராதாகிருஷ்ணன் எம்.பி. குறிப்பிட்டார்.

மேலும், இந்த மாநாட்டில் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட பல நாடுகளில் இருந்தும் முக்கியஸ்தர்கள் பங்கெடுக்கவுள்ளனர். குறிப்பாக இந்தியாவின் தமிழ் நாட்டில் இருந்து மேடைப் பேச்சாளர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது மலையக மக்கள் முன்னணிக்காகவும் அதன் முன்னேற்றத்துக்காகவும் செயற்பட்டவர்கள் அத்துடன் மலையகத்துக்குப் பெருமை சேர்த்தவர்கள் எனப் பலரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த மாநாடானது மலையக மக்கள் முன்னணியின் ஒரு மைகல்லாக அமையும் என்றும் இராதாகிருஷ்ணன் எம்.பி. மேலும் கூறினார். (அ)

## யாழ்ப்பாணத்தில் தென்னிந்திய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக யாழ். ஊடக அமையத்தில் அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் தம்பி மு.தம்பிராசா நடத்திய ஊடக சந்திப்பிலே மேற்படி விடயத்தை வன்மையாக கண்டித்ததோடு குறித்த செயற்பாடு இடம்பெறுமானால் அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு நடிகர், நடிகைகள் தங்கியுள்ள விடுதிகளை முற்றுகையிடுவோம் என்று பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "யாழ்ப்பாணம் என்பது தமிழர்களுடைய பண்பாட்டுக்கும் கலாசாரத்துக்கும் உலக அளவில் பெயர் பெற்ற இடமாகும். இந்தியத் திரைப்படங்களில் கூட யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தைப் பற்றி பெருமையாகப் பேசியுள்ளார்கள்.

ஆனால், இங்கே சினிமா நடிகர், நடிகைகளை அழைத்து வந்து அவர்களோடு புகைப்படம் எடுப்பதற்கு பணம் பெறுகின்ற கேவலமான செயலை குறித்த தனியார் நிறுவனம் நடத்த முற்படுகின்றது.

இன்றைக்கும் வலிகாமம் வடக்கில் இரவோடு இரவாக பூர்வீக நிலங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் அந்த நிலத்தில் குடியேற முடியாத அவலங்களோடு நில மீட்புக்காகப் போராடி வருகின்றார்கள்.

அப்படியான மக்களுடைய காணிகளை அபகரித்து தன்னுடைய சர்வாதிகார ஆட்சியிலே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கே விசாலமான சொகுசு மாளிகையை அமைத்திருந்தார்.

அந்த மாளிகையை இன்றைக்கு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் ரணில் அரசு குறித்த தனியார் நிறுவனத்துக்குத் தாரைவார்த்துள்ளது.

ஆனால், 14 இற்கும் மேற்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் தங்களுடைய நிலத்துக்காக இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான இழப்பீடுகளோ அல்லது எந்தவிதமான மாற்று ஏற்பாடுகளோ இதுவரை செய்யப்படவில்லை.

இந்தநிலையிலே இலட்சக்கணக்கான பணத்தைப் பெற்று யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகத் தனியார் பல்கலைக்கழகத்தை நிறுவியுள்ள இந்திரன் என்பவர் எங்களுடைய மக்களுடைய கலாசாரத்தையும் அழிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தின் பண்பாட்டைச் சீர்குலைக்கும் முகமாக இவ்வாறான செயற்பாட்டை நடத்த முற்படுகின்றார்.

உண்மையிலேயே நாங்கள் இந்தியக் கலைஞர்களுக்கோ அல்லது சினிமாத் துறையினருக்கோ எதிரானவர்கள் அல்லர்.

எங்களது போராட்டங்களையும், தமிழ் மக்களுடைய உணர்வுகளையும் பல தென்னிந்தியத் திரைப்படங்கள் வெளிக்கொண்டு வந்திருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் பல தென்னிந்தியப் பாடகர்களும் ஈழத்து வலிகளை வெளிக்கொணரும் முகமாக அல்லது போராட்டத்துக்கு ஆதரவாக தங்களுடைய குரல்களிலே பாடல்களைப் பாடியுள்ளார்கள்.

ஆகவே, வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்தும் முகமாக இவ்வாறான பிரபல இசைக் கலைஞர்கள் வந்து இங்கே நிகழ்ச்சி நடத்துவதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர்.

இந்த மண்ணிலே அவர்கள் வந்து எங்கள் கலைஞர்களுடன் இணைந்து இசை நிகழ்ச்சிகளை செய்வதையும் நாங்கள் இருகரம் கூப்பி வரவேற்கின்றோம். ஆனால், இவ்வாறான நிகழ்ச்சிகளின் பெயரால் எங்கள் மக்களை வைத்து வியாபாரம் செய்வார்களானால் அவர்களுக்கு எதிராக அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு எந்தளவுக்குச் சென்று போராடவும் ஒருபோதும் பின்னிற்காது என்பதையும் இந்த வேளையிலே தெரிவித்துக்கொள்கின்றோம்.

உண்மையிலேயே புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து வந்து இங்கே முதலீடுகளைச் செய்பவர்களால் எங்களுடைய மக்களுக்கோ அல்லது இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பையும் அல்லது பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்க வேண்டுமே அல்லாமல் இளைஞர்களைத் திசை திருப்பும் முகமாக எமது தமிழ் இளைஞர்களின் தமிழ்த் தேசிய உணர்வை மழுங்கடிக்கும் முகமாக இவ்வாறு நடிகைகளோடு கட்டணம் கட்டி புகைப்படம் எடுக்கின்ற செயற்பாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த இசை நிகழ்வானது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மகிழ்விக்கவும் அவர்களை ஆற்றுப்படுத்தவும் இலவசமாகவே நடத்துகின்றோம் என்று சொல்லி நிகழ்வு ஒழுங்குகளைச் செய்தவர்கள் இன்றைக்கு 25 ஆயிரம் ரூபா பெற்று ரிக்கெட் விநியோகிப்பதை நாங்கள் கண்டுகொண்டிருக்கின்றோம்.

அவர்கள் இந்த மண்ணிலே இருந்து இருப்பதையும் சுரண்டிக்கொண்டு போவதற்கா இந்த நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நுழைந்துள்ளது என்ற கேள்வியையும் நான் இந்த வேளையிலே எழுப்ப விரும்புகின்றேன்.

எனவே, இன்றைக்கு தென்னிந்திய சினிமாத்துறை உலக அளவில் வளர்ந்துள்ளமைக்கு எங்களுடைய ஈழத் தமிழர்களுடைய பங்களிப்பு மிகையாகாது என்பதை பல பிரபலமான சினிமா நடிகர்களும் வெளிப்படையாகவே கூறியுள்ளார்கள்.

ஈழத் தமிழர்களால்தான் தாங்கள் இன்றைக்கு உலக அளவில் பிரபலமாக இருப்பதற்கும், கோடிக்கணக்குகளிலே சம்பளம் பெறுவதற்கும் ஈழத் தமிழர்கள்தான் காரணம் என்பதைக் கூறியுள்ளார்கள்.

குறிப்பாக இன்றைக்கு இந்திய சினிமாவையே கட்டி ஆளுகின்றவர் ஒரு ஈழத் தமிழர். அவர் பல கோடிக் கணக்கிலே அங்கே முதலீடு செய்வதனால்தான் பல இந்திய சினிமா நடிகர்கள் மட்டுமன்றி சினிமாத் துறையை நம்பி இருப்பவர்கள் கூட பல்லாயிரக்கணக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.


ஆகவே அப்படியாக சினிமாத்துறைக்குப் பங்களிப்பு செய்கின்ற ஈழத்தமிழர்களைக் கேவலப்படுத்தும் முகமாக இந்தத் தனியார் நிறுவனத்தினுடைய செயற்பாடு இடம்பெறுகின்றது என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எனவே, இவற்றைத் தென்னிந்திய நடிகைகளும் நடிகர்களும் உணர்ந்து கொண்டு எங்களுடைய மக்களுடைய வலிகளையும் துன்பங்களையும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். இல்லையேல் நீங்கள் தங்கியுள்ள இடங்களை முற்றுகையிடுவோம் எனவும், மீண்டும் ஒரு தடவை நீங்கள் யாழ். மண்ணில் கால் பதிக்க முடியாமல் செய்து விடுவோம் எனவும் பகிரங்கமாக எச்சரிக்கை விடுக்கின்றேன்." - என்றார். (அ)

செய்திகளையும் இன்னும் பல
காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து
நிகழ்வுகள் பற்றிய
விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கிளிநொச்சி மாவட்டத்தில் 2024க்கான முதலாவது விவசாயக் குழுக் கூட்டம்





கிளிநொச்சி மாவட்டத்தில் 2024 ஆண்டுக்கான முதலாவது விவசாயக்குழுக் கூட்டம் இன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கமலநல சேவை திணைக்களத்தினர், நீர்ப்பாசனத் திணைக்களத்தினர், கமநல காப்புறுதித் திணைக்களத்தினர், விவசாய அமைப்புக்கள், விவசாய போதனாசிரியர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

2024 ஆம் ஆண்டுக்கான சிறுபோகச் செய்கையில் 100 வீத நெற்செய்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் தற்பொழுது குளங்களின் நீர்மட்டம் கொள்ளளவு மட்டத்தில் காணப்படுவதன் காரணமாக உரிய காலத்தில் நெற்செய்கை ஆரம்பிக்கப்படுமாயில் கடந்த காலங்களிலும் பார்க்க அதிகமான அளவு நெற்செய்தி மேற்கொள்ள முடியும் எனவும் இதன்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அவற்றுக்கு அமைவாக நெற்செய்கை ஆரம்பிக்கப்படும் என தீர்மானம் எட்டப்பட்டுள்ளதுடன், தரிசு நிலங்களில் உப உணவுச் செய்கையை மேற்கொள்வதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

வீதிகளில் உலரவிடும் நெல்லில் வீதிகளில் உள்ள காப்பெற்றில் காணப்படுகின்ற நச்சுத்தன்மை கலந்து, மனித உடலுக்கு பலவகை நோய்களை ஏற்படுத்த கூடும் எனவும், எனவே வீதிகளில் நெல்லை உலரவிடுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் இதன்போது அறிவுறுத்தப்பட்டது. (02)

# வவுனியா பல்கலை துணைவேந்தர் பதவி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன!

வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரனின் பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை 13 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் புதிய துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10.04.2023 ஆம் திகதிய 03/2023 ஆம் இலக்க சுற்றுநிருபத்துக்குமைவாக பல்கலைக்கழகப் பேரவையின் பதவி வழிச் செயலரான பதிவாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் மற்றும் மேலதிக விபரங்களை https://vau.ac.lk/calling-applications-for-the-post-of-vice-chancellor/ என்ற இணையத்தள முகவரியில் பார்வையிட முடியும்.

ஆர்வமுடையவர்கள் தமது விண்ணப்பங்களை இம் மாதம் 21 ஆம் திகதி பிற்பகல் 3:00 மணிக்கு முன்னராகப் பல்கலைக்கழகப் பதிவாளருக்குக் கிடைக்கக் கூடியவாறு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும், விண்ணப்பம் மற்றும் ஆவணங்களின் மென்பிரதி பதிவாளரது registrar@vau.ac.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை மாவட்ட விவசாயிகள் செயலகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை, பெப். 08

பெரும்போக வேளாண்மை அறுவடையினை தொடர்ந்து தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் குறைந்த விலையில் நெல்லை கொள்வனவு செய்வதால் தாம் மிகுந்த நட்டத்தை எதிர்நோக்கி வருவதாகவும், அரசாங்கம் கிலோ நெல்லின் விலையை 130 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனவும் கோரி பதாதைகளுடன் அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிலைமையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டினையும் பெற்றுத் தர வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.




# தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் பதிவுகளுக்கான நடமாடும் சேவை



(ஹஸ்பர் ஏ.எச்)


பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் இன்று இடம் பெற்றது.

குறித்த நடமாடும் சேவையானது தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுச் சான்றிதழ்கள் இல்லாதவர்களுக்காக சான்றிதழ்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் தேசிய அடையாள அட்டைச் சிக்கல்களைத் தீர்த்தல், காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெறல் என பல சேவைகளை பொதுமக்கள் இதன் போது பெற்றுப் பயனடைந்தனர்.

இதில் மாகாண காணி ஆணையாளர் தசநாயக்க, உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# சுகாதார சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்



(கே எ ஹமீட்)

அட்டாளைச்சேனையைச் சேர்ந்தவரான வைத்தியர் சம்சுதீன் கியாஸ்தீன் 38 வருடங்கள் சுகாதாரத் துறையில் வைத்தியராக சேவை செய்து வரும் 12 ஆம் திகதி ஓய்வு நிலை அடைகிறார்.

இவர், தமது சம காலத்தில் அட்டாளைச்சேனை, பாலமுனை மற்றும் ஒலுவில் போன்ற வைத்திய சாலைகளில் பொறுப்பு வைத்தியராகக் கடமையாற்றியிருந்தார். தற்போது அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் வைத்தியராக கடமை புரிந்து வருகிறார்.

# பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் இன்று! மொபைல் இணைய சேவை துண்டிக்கப்பட்டது



பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு இன்று தொடங்கியது. இதனை முன்னிட்டு நாடு முழுவதும் மொபைல் இணைய சேவை தற்காலிக மாக துண்டிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வன்முறை சம்பவங்கள், குண்டு வெடிப்புகள் என பரபரப்பான சூழலுக்கு மத்தியில் இன்று பாகிஸ்தானில் நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கியது. இந்த தேர்தலில் பல்வேறு வழக்குகளில் சிறையில் இருக்கும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சி, முன்னாள் பிரதமர் நவாஸ் ஷரீபின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் கட்சி, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் மகன் பிலாவல் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி இடையே மும்முனை போட்டி நிலவுகிறது.

இன்று காலை 8 மணியளவில் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் 12 கோடியே 85 லட்சத்து 85 ஆயிரத்து 760 பேர் வாக்களிக்க உள்ளதாக பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும் 65,000க்கும் மேற்பட்ட பாதுகாப்பு படையினர் தேர்தல் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த சூழலில், அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தபால் வழியில் தனது வாக்கை செலுத்தினார்.

சட்டம் - ஒழுங்கு பாதுகாப்பை கருத்தில் கொண்டு பாகிஸ்தான் முழுவதும் இன்று மொபைல் இணைய சேவை தற்காலிகமாக துண்டிக்கப்பட்டுள்ளதாக அந் நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் இன்று நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், நேற்று மதியம் பலுசிஸ் தான் மாகாணத்தில் உள்ள பிஷின் நகரில் சுயேச்சை வேட்பாளர் அஸ்ஃபந்த்யார் காகரின் தேர்தல் அலுவல கத்துக்கு வெளியே சக்திவாய்ந்த குண்டுவெடித்தது. இதில் 14 பேர் உயிரிழந்தனர். 26 பேர் காயம் அடைந் தனர். (04)

# பிலிப்பைன்ஸ் சுரங்கப் பகுதியில் நிலச்சரிவில் சிக்கி 6 பேர் பலி!



பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் தங்கச் சுரங் கங்கள் அமைந்துள்ள கிராமமொன்றில் ஏற்பட்ட நிலச் சரிவில் சிக்கி 6 பேர் பலியாகினர். 46 பேரைக் காண வில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களில் 27 பேர் சாலையில் நிறுத்தப்பட்டிருந்த 2 பேருந்துகளில் அமர்ந்திருந்த சுரங்கத் தொழிலாளர்கள் என்று அதிகாரிகள் கூறி னர்.

சம்பவப் பகுதிகளில் ராணுவம், பொலிஸார் மற்றும் தன்னார்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு நிலச்சரிவில் காயமடைந்த 31 பேரை மீட்டுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (04)




# அமெரிக்க அதிபர் தேர்தல் நிக்கி ஹேலிக்கு பின்னடைவு

அமெரிக்காவில் வரும் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக அந்த நாட்டின் நெவாடா மாகாணத்தில் நடைபெற்ற போட்டியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிக்கி ஹேலி தோல்வியடைந்தார்.

அந்த வாக்கெடுப்பில் 'எந்த வேட்பாளருக்கும் ஆதரவில்லை' என்று பெரும்பான்மையான வாக்காளர்கள் தெரிவித்ததால், அதில் பங்கேற்ற ஒரே முக்கிய போட்டியாளரான நிக்கி ஹேலி அதிபர் தேர்தல் வேட்பாளர் போட்டியில் பின்னடைவைச் சந்தித்துள்ளதாகக் கூறப்படுகிறது. (04)

# இந்தியர்கள் ஈரான் செல்ல விசா தேவையில்லையாம்!




டெல்லியில் உள்ள ஈரான் தூதரகம் நேற்று வெளி யிட்டுள்ள அறிக்கையில், இந்திய குடிமக்களுக்கான விசாவை ஈரான் அரசு நான்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிப்ரவரி 4 ம் திகதி முதல் ரத்துச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் படி, புதிய விதிகளின்படி சாதாரண பாஸ்போர்ட் வைத்திருக்கும் இந்தியர்கள் 6 மாதங்களுக்கு ஒருமுறை விசா இல்லாமல் ஈரானுக் குள் அனுமதிக்கப்படுவார்கள். இவர்கள் அதிகபட்சம் 15 நாட்கள் தங்கலாம்.

விமானம் மூலம் ஈரானுக்கு சுற்றுலா செல்லும் இந்தியர்களுக்கு மட்டும் இந்த சலுகை பொருந்தும்.

இந்தியர்கள் 15 நாட்களுக்கு மேல் தங்க விரும்பினாலோ அல்லது 6 மாதங்களுக்குள் பலமுறை வந்து செல்ல விரும்பினாலோ அவர்களுக்கு பிற வகை அனுமதி தேவை. அவர்கள் இந்தியாவில் உள்ள ஈரான் தூதரகங்களில் விசா பெறுவது அவசியம்.

இந்திய குடிமக்கள் மற்றும் ரஷ்யா, ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரைன், சவுதி, கட்டார், குவைத், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான், இந்தோனேசியா, ஜப்பான், சிங்கப்பூர் உள்ளிட்ட 32 நாடுகளின் மக்க ளுக்கு விசா தேவையை நீக்கும் முடிவை ஈரான் அரசு கடந்த ஆண்டு டிசம்பரில் அறிவித்தது.

ஈரானில் சுற்றுலாவை மேம்படுத்தவும் உலகம் முழுவதிலும் இருந்து சுற்றுலாப் பயணிகளின் வரு கையை அதிகரிக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டதாக அந் நாட்டு சுற்றுலாத் துறை அமைச்சர் எச துல்லா ஜர்காமி கூறினார்.

சமீபத்திய புள்ளிவிவரங்களின் படி, நடப்பு ஈரானிய ஆண்டின் முதல் 8 மாதங்களில் (மார்ச் 21 முதல்) ஈரானில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண் ணிக்கை 44 லட்சத்தை எட்டியுள்ளது. இது கடந்த ஆண்டு இதே காலத்து எண்ணிக்கையை விட 48.5 சதவீதம் அதிகம். ஈரான் அரசு ஏற்கெனவே துருக்கி, அஸர்பைஜான், ஓமன், சீனா, ஆர்மீனியா, லெபனான், சிரியா ஆகிய நாடுகளின் மக்களுக்கு விசா தேவையை ரத்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# வருடாந்த திருவிழாவிற்கு தயாராகும் கச்சதீவு



வருடாந்த கச்சதீவுத் திருவிழா வரும் 23 மற்றும் ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட செயலாளர் இந்நிகழ்விற்கு தேவையான ஏற்பாடுகளை செய்துள்ள பின்னணியில், பக்தர்களின் வசதிக்காக உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளை ஏற்படுத்துவதற்கு இலங்கை கடற்படையினர் தற்போது செயற்பட்டு வருகின்றனர்.

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் உத்தரவுக்கமைய, வடக்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் காஞ்சன பனாகொடவின் மேற்பார்வையின் கீழ், கச்சதீவில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளில் கடற்படை ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதிகள், தற்காலிக தங்குமிடங்கள், சாலைகள், இறங்குதுறைகள் மற்றும் மின்சார விநியோகத்தை உறுதி செய்தல் போன்றவைற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் வருடாந்த திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களின் பாதுகாப்பு, தற்காலிகமாக நோய்வாய்ப்பட்டவர்களை பராமரிக்கும் உயிர்காக்கும் குழுக்கள் மற்றும் மருத்துவ குழுக்களை இலங்கை கடற்படை அனுப்ப உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த வருடாந்த உற்சவத்தில் பெருமளவிலான இந்திய மற்றும் இலங்கை பக்தர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கேசன்துறையிலிருந்து தேவாலயத்திற்குத் தேவையான உபகரணங்களையும் பாதிரியார்கள், அரச அதிகாரிகள், முக்கியஸ்தர்கள், பக்தர்கள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் ஆகியோரை ஏற்றிச் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கடற்படையினர் செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிகாட்டுவானிலிருந்தும், நெடுந்தீவில் இருந்தும் கச்சத்தீவுக்குப் படகுச் சேவைகளும் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இயற்கை முறைப் பயிரிடல் வேளாண்மை அறுவடை விழா



(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறைமாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டு விளைந்த நெல் அறுவடை விழா நாவிதன்வெளியில் நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 15ம் கிராம வேப்பையடி கிராம குழு உறுப்பினர்கள் 22 பேருக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இயற்கை முறையில் விவசாயத்தை மேற்கொள்வதற்காக விதை நெல் வழங்கப்பட்டு விதைப்பு செய்யப்பட்டது.

அந்த வேளாண்மை அறுவடை விழா பாரம்பரிய முறைப்படி ஆரம்பிக்கப்பட்டு அறுவடை நேற்று முன்தினம் மேற் கொள்ளப்பட்டது.

இந் நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் தலைமை தாங்கினார்.

மேலும் அமைப்பின் நாவிதன்வெளி கள உத்தியோகத்தர் ராஜினி மற்றும் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# அடிப்படை வசதிகளற்ற கல்லரிப்பு பழங்குடி கிராமத்தில் பொங்கல் விழா





(வி.ரி. சகாதேவராஜா)

வாகரை பிரதேசத்தில் உள்ள வெருகல் கல்லரிப்பு பழங்குடிக் கிராமத்தில் வள்ளுவம் அமைப்பின் பொங்கல் விழா கிராமியச் சூழலில் இடம்பெற்றது.

அடிப்படை வசதிகள் எதுவும் மற்ற கல்லரிப்புக் கிராமத்தில் வள்ளுவம் அமைப்பு பொங்கலுக்கென புதிய உடுப்புகள் பொங்கல் பானை முதல் சகல பொருட்களையும் வழங்கி இந்த பொங்கல் விழாவை நடத்தி வைத்தனர். அங்கு மலையக மக்களின் 200 வருட வாழ்வியல் சரிதத்தை பிரதிபலிக்கும் சிறப்பு நிகழ்ச்சி அம்சங்களும் இடம்பெற்றன.

கொழுந்து பறித்தல் தொடக்கம் மலையக கலை கலாசார பாரம்பரியங்கள்ளை பறைசாற்றும் வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை வைத்தியசாலை வீதி என்று எந்த அடிப்படை வசதியும் அற்ற கல்லரிப்பு கிராமத்தில் 40 பழங்குடி குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

வள்ளுவம் அமைப்பினரோடு சமூக செயற்பாட்டாளர் ஆசிரியை மலர்ச்செல்வி இதற்கான ஒழுங்கமைப்பை மேற்கொண்டிருந்தார்.

# ஊடகவியலாளரின் தந்தை காலமானார்



'தினக்குரல்' பத்திரிகையின் ஊடகவியலாளர் ந. ஜெயகாந்தனின் தந்தையார் சின்னையா நல்லுசாமி (வயது 77) நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 144/18, கொழும்பு வீதி, யட்டியாந்தோட்டை (கொமாடுவ) இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை பிற் பகல் 2 மணியளவில் இறுதிக் கிரியையின் பின்னர் கொமாடுவ மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படவுள்ளது.

அன்னார் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.



# சுழிபுரத்தில் தன்னார்வ பயிர்ச்செய்கை பொதுமக்களால் இன்று நெல் அறுவடை





யாழ்ப்பாணம் - சுழிபுரத்தில் நெல் வயலாக மாற்றப்பட்ட தரிசு நில காணியில் பொதுமக்களால் இன்று நெல் அறுவடை மேற்கொள்ளபட்டது

சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் மேற்கு ஜே -172 கிராம அலுவலர் பிரிவில் கடந்த 2012 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட திருவடிநிலை மீள் குடியேற்ற பகுதியில் உள்ள குகன் குல சங்கத்தினருக்கு உரித்தான காணிமில் 60ஏக்கர் தரிசு நிலக் காணி சுழிபுரம்மேற்கு வாழ் பொதுமக்கள் , புலம்பெயர்தேசத்தவர்கள் ,கலைமகள் விளையாட்டு கழகத்தினரால் பசுமை புரட்சி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டது.

தொடர்ச்சியாக குறித்த காணியின் 62 பரப்பு நெல் வயலாக மாற்றப்பட்ட நிலையில் இன்றைய தினம் அறுவடை முன்னெடுக்கப்பட்டது.

முன்னெடுக்கபட்ட அறுவடைமூலம் பெறப்பட்ட நெல்லினை விற்பனை செய்து தொடர்சியாக சமூக பணிகளில் ஈடுபடுத்தவுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் தற்சார்பு பொருளாதாரத்தை வளர்க்கும் முகமாக குறித்த நிலப்பரப்பு விவசாய நிலமாக மாற்றப்பட்டுள்ள நிலையில் தொடர்ச்சியாக குறித்த பகுதியில் அமைந்துள் கடல் நீர் ஏரி வாய்க்காலில் நன்னீர் மீன்பிடித் திட்டத்தினையும், வேறு பயிரச்செய்கைகளையும் பிரதேச வாசிகள் முன்னெடுக்கவுள்ளனர்.

எந்த ஒரு அரசியல் , அரச அதிகாரிகளின் ஆதரவின்றியும் பொதுமக்களால் தன்னார்வ ரீதியாக குறித்த பசுமை புரட்சி திட்டம் முன்னெடுக்கபட்டமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய குறித்த அறுவடை விழாவில் புலம்பெயர் தேச உறவுகள் சார்பில் முத்தையா ஞானவேல், வனிதா ரவீந்திரன், பசுமைப் புரட்சி திட்ட குழுவினர்களான நாராயணன் சபாரத்தினம், சைலசுதா, கனகசபை ரவீந்திரன், சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டு கழகத்தினர், பொதுமக்கள் இளைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (01)

# தரம் 6 க்கு மேல் உள்ள மாணவர்களில் அநேகர் வன்முறை மனப்பான்மையில் உள்ளனர்

## உளவியல் சிறப்பு மருத்துவர் ரூமி ரூபன்



தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரையான பாடசாலை மாணவர்களில் பெரும்பாலானோர் வன்முறையாளர்களாக மாறியுள்ளதாக கராப்பிட்டி போதனா வைத்தியசாலையின் உளவியல் சிறப்பு மருத்துவர் ரூமி ரூபன் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடகங்கள் மற்றும் திரைப்படங்களில் காட்டப்படும் வெட்டுக்கொத்துகள், கொலைகள், துப்பாக்கிச் சூடு, பழிவாங்கும் கதைகள் மற்றும் வீடியோ கேம்கள் போன்ற காட்சிகளைப் பார்ப்பது பிள்ளைகளின் நடத்தையை பாதித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிவித்துள்ள மருத்துவர் ரூமி ரூபன், "தற்போது 6ஆம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்கள், பெற்றோர் சொல் கேளாத நிலையை அடைந்துள்ளனர். அந்தளவிற்கு அவர்கள் ஆவேசமான மன உணர்வில் வன்முறையாளர்களாக மாறியுள்ளனர். எனவே, பிள்ளைகளுக்கு மொபைல் ஃபோன் கொடுக்க வேண்டாம், அவற்றின் மூலம் சமூக வலைதளங்களில் கொலைகள், தாக்குதல்கள், பழிவாங்கல்களைப் பார்க்கிறார்கள்.

பிள்ளையிடம் செல்ஃபோன் கொடுக்கப்பட்டால், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை கண்காணியுங்கள். மேலும்,வீடியோ கேம்களை விளையாட அனுமதிக்காதீர்கள். இத்தைகைய பழக்கங்களால் குழந்தைகள் வன்முறையில் ஈடுபடுகின்றனர். ஆகவே, பிள்ளைகள் தவறான பாதையில் செல்லாமல் காத்துக்கொள்ள வேண்டியது பெற்றோரின் பொறுப்பு" என்றார். (ரெப-11)






# மட்டக்களப்பு மாவட்டத்தில் பாண் எடை பரிசோதிக்கும் திடீர் சுற்றிவளைப்புக்கள்

(கே எ ஹமீட்)

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விற்பனைக்காக தயாரிக்கப்படும் பாண்களின் நிறை குறித்து வர்த்தக நிலையங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க மட்டக்களப்பு மாவட்டத்திலும் மட்டக்களப்பு நகர், காத்தான் குடி, ஆரையம்பதி, ஏறாவூர் மற்றும் ஓட்டமாவடி ஆகிய நகர்ப் பிரதேசங்களில் இயங்கும் ஹோட்டல்கள் மற்றும் வெதுப்பகங்களில் பாண்களின் எடை தொடர்பான சுற்றிவளைப்புக்கள் மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டதாக அதன் மாவட்டப் பொறுப்பதிகாரி என். எம். சப்ராஸ் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், திங்கட்கிழமை (05) தொடக்கம் நேற்று (07) பி.ப. 4.00 மணி வரை 30 இற்கும் மேற்பட்ட ஹோட்டல்கள் மற்றும் வெதுப்பகங்கள் பரிசோதனை செய்யப்பட்டதுடன், குறைந்த நிறையில் பாண்களை விற்பனை செய்த 11 வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாண்களின் விலைகளை வெளிப்படுத்தாமை, முறையான லேபல் இடப்படாமை போன்ற குற்றங்களுக்காக 5 பாண் விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பாவனையாளர் அலுவல்கள் அதி காரசபையின் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய ஒரு இறாத்தல் பாண் 450 கிராம் காணப்பட வேண்டும் என்பதுடன் அவசியமாயின் 13.5 கிராம் நிறைக் குறைவிற்கும் அரை இறாத்தல் பாண் 225 கிராம் 9 கிராம் எடைக் குறைவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பொதி செய்யப்பட்ட, சேமித்து வைக்கப்பட்ட, விற்பனைக்கு வழங்கப்படும், விற்பனைக்காகக் காட்டப்படும் அல்லது சில்லறை அல்லது மொத்த மாக விற்கப்படும் தயாரிக்கப்பட்ட எந்த வகைப் பாணும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான எடையைக் கொண்டிருக்க வேண்டும் என பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அறிவித்துள்ளது.

விற்பனைக்காக காட்சிப் படுத்தப்பட்டுள்ள பாணின் எடையை காட்சிப் படுத்துமாறு அனைத்து வர்த்தகர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் எதிர் காலத்தில் இச்சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் இடம்பெறவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பாவனையாளர் அதிகார சபை மேலும் தெரிவித்தது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.02.2024 இல் வெளியிடப்பெற்றது.